திரு. ரா. கு. பெருமாள்: தலைவர் அவர்களே, இந்த 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 3 என்ற கல்வித் திட்டத்தில் ஒரே ஒரு தலைமை ஆசிரியர் தான் இருப்பாரா? அல்லது ப்ளஸ் 2க்கு தனி தலைமை ஆசிரியர் இருப்பாரா? அப்படியானால் அவர்தான் 10வது வகுப்பு வரையில் உள்ள பள்ளிக்கும் தலைமையாசிரியராக இருப்பாரா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி ஸ்கூலுக்கு ஒரே ஒரு தலைமையாசிரியர்தான்.

திரு. செ. சதாசிவம்: தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி ஸ்கூல்களிலே இப்போது இருக்கின்ற தலைமை ஆசிரியர்கள் பி.ஏ., பி.டியாக இருக்கிறார்கள், அவர்களை மாற்றி எம்.ஏ. படித்தவர்களை, கல்லூரிகளில் இருக்கிறவர்களை நியமிக்கப்போகிறார்களா அல்லது ஏற்கனவே இருக்கிறவர்களையே நியமிக்கப்போகிறார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அதற்கான தகுதிகள், வரையறுக்கப்பட்ட தகுதிகள் இருக்குமானால் அவர்களே இருக்கலாம்.

உதகமண்டலத்தில் வெளிப்புற விளையாட்டு அரங்கம்

*834 வினா—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் ஒரு வெளிப்புற விளையாட்டு அரங்கம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆம். ஐயா.

திரு. போ. கோபாலன்: தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலே அரசினர் பூங்காவிற்குப் பக்கத்திலே பிரிக்ஸ் உயர்நிலைப் பள்ளியிலே உள்ள விளையாட்டு மைதானத்திலேதான் அது அமைக்கப்படுகிறதா? அல்லது வேறு எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது? அங்கே ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் உள்ள உட்பகுதி இன்னும் காலியாக வீணாக இருக்கிறது, அந்த இடத்திலே அது அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஊட்டி நகர்ப்புறத்தில், லாலி இன்ஸ்டிட்யூட் அருகாமையில் சர்வே எண் 4202, 4204, பிளாக் எண் 88, 89-ல் மேற்படி விளையாட்டு அரங்கைக் கட்டுவதற்கான கருத்துரு உள்ளது. மேற்படி கருத்துருவுக்கான திட்டங்களும், செலவு மதிப்பீடுகளும், பொதுப் பணித் துறையின் வட்டார அலுவலரிடம் கோரப்பட்டுள்ளது. திட்டங்களைப் பெற்ற பின்னர் அரசிடம் தேவையான நிதி உதவிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் விண்ணபிக்கும்போது, அரசு அக்கறையுடன் பரிசீலிக்கும்,

1978 ஏப்ரல் 7]

திரு. கா. அப்புனு கவுண்டர்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரிலேயும் ஒவ்வொரு ஸ்டேடியம் கட்டுவது அரசின் கொள்கையா? அப்படி என்றால் இப்போது இல்லாமல் இருக்கும் இடங்களில் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அப்படியொரு திட்டம் இருக்கிறது. அதற்கு அந்தந்த மாவட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசீய முதியோர் கல்வித் திட்டம்

*835 வினா திரு. கு. ரமணி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய முதியோர் கல்வித் திட்டம் ஒன்றை மத்திய அரசு துரிதமாக அமுல் நடத்த உள்ளது என்பது தமிழக அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் என்ன?

(இ) தமிழகத்தில் அதை அமுலாக்க ஏற்பாடு உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) ஆம்.

(ஆ) மைய அரசு தனது முதியோர்க் கல்வித் திட்டத்தின் கீழ் இந்தியாவிலுள்ள பதினைந்து வயதிலிருந்து முப்பத்தைந்து வயதுவரை எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் அனைவருக்கும் படிப்பறிவு புகட்டவேண்டும் என்றும், இத்திட்டத்தை 2-10-78 முதல் நடைமுறைக்குக் கொண்டு வந்து ஐந்து ஆண்டுகளில் அறியாமையைப் போக்க வேண்டுமெனவும் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான கல்வி மையங்களை மனமுவந்து செயல்படும் நிறுவனங்கள், (Voluntary agencies) அரிமா சங்கம், ரோட்டரி கிளப், நேரு யுவக் கேந்திரங்கள் போன்றவை நடத்தலாமெனவும் மீதியுள்ள இடங்களில் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அரசே இம்மையங்களை நடத்தலாமெனவும் மைய அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் மைய அரசு ஏற்க உள்ளது. அதில் நிருவாகச் செலவில் 75 விழுக்காட்டினையும் (Administration cost) செயல்படுமிடத்திலுள்ள செலவு (field cost) முழுவதையும் மைய அரசு ஏற்பதாகத் திட்டமிட்டுள்ளது.

(இ) ஆம்.